பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கீழநத்தம் கிராம ஊராட்சி
ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி.வே.அனுராதா,

நா.க.எண். கீ.ஊ/ம.பி.அ.01/2023 நாள்: 21.08.2023

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - திருநெல்வேலி மாவட்டம் - பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - கீழநத்தம் கிராம ஊராட்சி - கீழநத்தம் வருவாய் கிராமம் - சர்வே எண்: 32/2, 33/1, 33/2, 34/3, 35/1, 36, 37/1, 37/2-ல் 59777.00/ச.மீ (14.77ஏக்கர்)- குடியிருப்பு மனைப்பிரிவு - D.T.C.P.தொழில் நுட்பஒப்புதல் மற்றும் வரைபடங்களுக்கு ம.வ /தி.உ.திகு எண்: 16/2023 என எண்ணிட்டு வரபெற்றது - இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடல் - சார்பு.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண் 71, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 16.08.2003
2) அரசாணை நிலை எண் 255, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 18.08.1997
3) திருநெல்வேலி மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண். 923/2021 திலிமா 3, நாள்: 12.06.2023
4) ஊராட்சி மன்ற தீர்மான எண்: 11/2023, நாள்: 31.07.2023

ஆணை:

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கீழநத்தம் கிராம ஊராட்சி கீழநத்தம் வருவாய் கிராமத்தில் சர்வே எண்: 32/2, 33/1, 33/2, 34/3, 35/1, 36, 37/1, 37/2-ல் (14.77 ஏக்கர்) 59777.00 சதுரமீட்டர் பரப்பளவில் அமையவுள்ள "குடியிருப்பு மனைப் பிரிவிற்கு" இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொறுப்பு), திருநெல்வேலி, மாவட்ட நகர் ஊரமைப்பு, உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ம.வ./தி.உ.தி.கு எண்: 16/2023 என எண்ணிட்டு தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் தி.அ/ ம.வ./ தி.உ.தி.கு எண்: 53/2023 என எண்ணிட்டு திட்ட அனுமதியும் வரப்பெற்றுள்ளது.

இம்மனைப்பிரிவு 59777.00 சதுரமீட்டர் பரப்பில் (14.77 ஏக்கர்) அமைந்துள்ளது. இதில் 228 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இம்மனைப்பிரிவில் 19914.30 சதுரமீட்டர் பரப்பளவில் சாலைகள் மற்றும் மூலைமுடுக்குகள், 4367.53 சதுரமீட்டர் பரப்பளவில் பொது பூங்கா, உள்ளாட்சிக்கு பொது உபயோக ஒதுக்கீடு 228.64 சதுரமீட்டர் மற்றும் மின்வாரியத்திற்கு 218.22 சதுரமீட்டர் சேர்த்து மொத்தம் 24728.69 சதுரமீட்டர் பரப்பளவுள்ள நிலம் ஊராட்சிக்கு தானப்பத்திரப் பதிவு எண்: 3129/2022 நாள்: 22.04.2022 மற்றும் 6448/2022, நாள்: 25.08.2022-ன் மூலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவிற்கு கீழநத்தம் ஊராட்சிக்கு Layout கட்டணம் 59777.00 சதுரமீட்டருக்கு (14.77 ஏக்கர்) ரூ.15000/-(ரூபாய் பதினைந்து ஆயிரம் மட்டும்) ஆய்வுக் கட்டணம் ரூ.1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) மற்றும் மனை ஒன்றுக்கு ஆயிரம் வீதம் 228 மனைக்கு ரூ.2,28,000/-(ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்து எட்டாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.2,44,000/- ஊராட்சிக்கு வங்கி வரைவோலை எண்:028373/17.08.2023 - ன் படி மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.அதற்கு பல்வகை ரசீது எண்: 23695/21.08.2023-ன் படி ரசீது வழங்கப்பட்டது.

எனவே, பின்வரும் நிபந்தனைகளுடன் இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொறுப்பு), திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் கடித ந.க.எண். 923/2021திலிமா3, நாள்: 12.06.2023 குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

MI DUAL CAMERA
Scanned with CamScanner

2. மேற்படி கடிதத்துடன் வரப்பெற்ற கோப்பு ந.க.எண்: 923/2021 திகிமா3 நாள்: 12.06.2023-ல் குறிப்பிட்ட மனைகள் விற்பனை மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி செயல்பட வேண்டும்

3. மனைப்பிரிவிற்கு Layout கட்டணம் செலுத்தியதில் வித்தியாச தொகை ஏதேனும் செலுத்த வேண்டியது பின்னர் அறியப்பட்டால் அதனை மனுதாரர் செலுத்தவேண்டும்.

4. அரசாணை எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள் 04.05.2017-ல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் விதி எண் 4 மற்றும் 6-ல் குறிப்பிட்டுள்ள இனங்கள் பாதிக்கும் வண்ணம் இருப்பின் அந்த மனையின் வரன்முறை எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

5. நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு மனுதாரரை சார்ந்ததாகும்.

6. மனைப்பிரிவின் ஊடே முழுமைத்திட்ட/விரிவு அபிவிருத்தி திட்ட சாலைகள் மற்றும் பூங்கா அமையுமாயின் அம்மனையின் வரன்முறை எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

7. மனைப்பிரிவிற்கு மற்றும் மனைகளுக்கு செல்லும் அணுகுசாலை குறித்தான உரிமம் மனுதாரால் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.

8. நீதிமன்ற வழக்கு ஏதும் இருப்பின் மனுதாரரை சார்ந்ததாகும்.

9. மனைப்பிரிவுகள் ஊடே உயர் மின் அழுத்த கம்பி பாதை, கோபுர பாதை செல்லுமாயின் அம்மனையின் வரன்முறை எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

10. மனை/மனைப்பிரிவின் ஊடே போக்கு கால்வாய் அமையுமாயின், அதற்கு இடையூறின்றி பாதுகாக்கப்பட வேண்டும்.

11. மனைப்பிரிவில் அமைந்துள்ள தெருக்களில் மின்கம்பம் மற்றும் தெருவிளக்குகள் மனுதாரரின் சொந்த செலவில் 30 தினங்களுக்குள் அமைக்கப்பட்டு, அதுவிபரம் ஊராட்சி மன்றத் தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இணைப்பு:

1. திருநெல்வேலி மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் செயல்முறை ஆணை
2. ஒப்புதளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் - 1

தலைவர், 21/08/23
கிழநத்தம் கிராம ஊராட்சி,
பாளையங்கோட்டை ஊராட்சிஒன்றியம்.
21/08/2023.

பெறுநர்:

மீனாசங்கர் பிராபர்டிஸ் &
மீனாசங்கர் ரியால்டி,
17 A , பூபதி பில்டிங்ஸ்,
விருதுநகர் ரோடு,
சிவகாசி,
விருதுநகர் மாவட்டம்-626 123.

நகல்:

1.இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேவியர்காலனி,தெற்குபுறவழிச்சாலை, திருநெல்வேலி-627 005.
2.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) பாளையங்கோட்டை.
3.உதவி இயக்குநர்,நிலஅளவைமற்றும் பதிவேடுகள் துறை,
மாவட்டஆட்சியர்அலுவலகம்,திருநெல்வேலிமாவட்டம்.
4.வட்டாட்சியர்,பாளையங்கோட்டைவட்டம்,திருநெல்வேலிமாவட்டம்.
5.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம்-4), பாளையங்கோட்டை.

REDMI NOTE 6 PRO
MI DUAL CAMERA
Scanned with CamScanner